அ.வ.எண். 64/2022 நாள்: 20.07.2026

வா.சா.2 திரு.நடராஜன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வழக்கு சொத்து அவருக்கு உரியது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது முதல்விசாரண வாக்குமூலம் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் சரியல்ல, நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் என்றால் 2 பேர் ஆவர். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால் 3 நபர்கள் ஆவர், அவர்கள் 1.துரையய்யா, 2.வெங்கிடுசாமி, 3.சின்னன்னா. வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது தம்பி மனைவி ஆவார். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் பெரியப்பா துரையய்யா மகன் ஆவார். எனது தகப்பனார் வெங்கிடுசாமி என்பவர் ரெங்கராஜ் மனைவி சீத்தாலெட்சுமியிடம் தாவா சொத்தை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1994–ல் கிரையம் வாங்கினார்.

2) மேற்படி கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால் தெரியாது. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் திருச்சியில் வசித்து வருகிறேன். எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் 35 வருடங்களாக வசித்து வருகிறேன். மேற்படி கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தை தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் 82 ஆகும். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் யார்யாருக்கு எழுதிக் கொடுப்பட்டது என்றால் அண்ணன் தம்பி நாங்கள் மூவரும் எங்களது தம்பி வரதராஜனுக்கு எழுதிக்கொடுத்தோம். எனது தந்தைக்கு பிறந்தவர்கள் எத்தனைபேர் என்றால் ஆண்கள்–4, பெண்–1 ஆவோம். எனது தகப்பனார் உயிரோடு இருந்த காலத்தில் பாகபிரிவினை செய்து கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

3) மேற்படி விடுதலை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது தகப்பனார் எனது சித்தப்பா மகன் பரமசிவத்திற்கு கடந்த 20.07.2019 அன்று நன்செய் புல எண்.82/1–ல் 1 ஏக்கர் 12 செண்டில் 216 குழியை குழி ஒன்றுக்கு ரூ.900/– நிர்ணயம் செய்து ரூ.1,94,400/–

பெற்றுக்கொண்டு தாவா சொத்தை ஒப்படைத்துவிட்டார், மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் தர்மராாஜ் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் எனது சித்தப்பா சின்னன்னாவின் மனைவி வசந்தாவிடம் 20.07.2010–ல் 112 குழிக்கு ரூ.1,00,800/– கொடுத்து கிரையம் வாங்கியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து முழுவதையும் 1 ஆம் பிரதிவாதிதான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2016–ல் இறந்தார்.

4) எனது தம்பி வரதராஜன் வாதி சீத்தாலெட்சுமிக்கு செட்டில்மென்ட் ஆவணம் எப்போது எழுதிக்கொடுத்தார் என்றால் 2021–ல் எழுதிக்கொடுத்தார். 2010 வருடமே எனது தகப்பனார் 1ம் பிரதவாதி பரமசிவத்திற்கு தாவா சொத்தை கிரையம் ஒப்பந்தும் மூலம் ஒப்படைத்துவிட்டார், எல்லாம் தெரிந்து கொண்டு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதிக்கு எனது தம்பி வரதராஜன் மூலமாக தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்துடன் செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியிடம் தான் உள்ளது நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதேபோல் ரெங்கராஜ் மனைவி சீத்தாலெட்சுமி எங்களுக்கு எந்தவித ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், மேற்படி ரெங்கராஜ் மனைவி சீத்தாலெட்சுமி பெயரை பயன்படுத்தி வாதியை வைத்து செட்டில்மென்ட் ஏற்படுத்தி அதனடிப்படையில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Nadarajan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

Sd/-P.Ramesh

DISTRICT MUNSIF, THIRUVAIYARU